**சாலை பாதுகாப்பு வழிகாட்டு முகமை**

மாநிலத்தின் சாலை பாதுகாப்பு சார்ந்த பணிகளை கவனிப்பதற்காகவும், சாலை பாதுகாப்பு ஆணையருக்கு உதவுவதற்காகவும் சாலை பாதுகாப்புப்பிரிவு அரசால் ஏற்படுத்தப்பட்டது. தற்பொழுது, இச்சாலை பாதுகாப்பு பிரிவானது, உச்சநீதிமன்ற சாலை பாதுகாப்புப் பிரிவு, புதுடெல்லி அறிவுறுத்தலின் அடிப்படையில், இணைப்போக்குவரத்து ஆணையர் (சாலை பாதுகாப்பு) தலைமையின்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்டு சாலை பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்வதற்காக, சாலை பாதுகாப்பு வழிகாட்டு முகமை என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

- சாலைப் போக்குவரத்து நிறுவனத்திலிருந்து துணை இயக்குநர்ஒருவர்.
- பள்ளிக்கல்வி இயக்குநரகத்திலிருந்து உதவி இயக்குநர் ஒருவர்.
- நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தைச் சார்ந்த உதவிப் பொறியாளர் அல்லது உதவி இயக்குநர் ஒருவர்.
- காவல் துறையிலிருந்து காவல் ஆய்வாளர் ஒருவர்.
- மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகத்திலிருந்து அலுவலக கண்காணிப்பாளர் ஒருவர்.

சாலை விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புக்களை குறைக்கும்பொருட்டு ஆண்டு செயல் திட்டம் ஒன்றினை தயாரித்து இலக்கு நிர்ணயித்து அதை அடைவதற்காகவும், அதன் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கும் உரிய செயல் திட்டங்களை தயாரித்து வெளியிடுதல் சாலைப் பாதுகாப்பு வழிகாட்டு முகமையின்முக்கியப் பணிகளில் ஒன்றாகும். இந்த முகமை, சாலை விபத்துகளுக்கான காரணங்களை பகுப்பாய்வு செய்து, அதிக விபத்துக்கள் நடக்கும் பகுதிகளை / சாலைகளைக் கண்டறிந்து விபத்துக்களை வகைப்படுத்துகிறது. மேலும், இந்த முகமை அனைத்து மாவட்டங்களிலும் சாலைப் பாதுகாப்பு நிதி மூலம் நடைபெறும் திட்டங்களை கண்காணித்து வருகிறது.

சாலை விபத்துக்கள்-விவரம்

**தமிழ்நாடு மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளாக நிகழ்ந்த விபத்துகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் ஒப்பீட்டு அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:**

| ஆண்டு | மொத்த விபத்துகள் | மரண விபத்துகள் | இறந்தவர்களின் எண்ணிக்கை | மொத்த வாகனங்களின் எண்ணிக்கை (01.01.2023ன் படி) | விபத்துகளின் சதவீதம் | மரண விபத்துகளின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 2008 | 60409 | 11813 | 12784 | 10789970 | 0.56 | 0.11 |
| 2009 | 60794 | 12727 | 13746 | 11820613 | 0.51 | 0.11 |
| 2010 | 64996 | 14241 | 15409 | 13220752 | 0.49 | 0.11 |
| 2011 | 65873 | 14359 | 15422 | 14861695 | 0.44 | 0.10 |
| 2012 | 67757 | 15072 | 16175 | 16625653 | 0.41 | 0.09 |
| 2013 | 66238 | 14504 | 15563 | 18286774 | 0.36 | 0.08 |
| 2014 | 67250 | 14165 | 15190 | 19995382 | 0.34 | 0.07 |
| 2015 | 69059 | 14524 | 15642 | 21558272 | 0.32 | 0.07 |
| 2016 | 71431 | 16092 | 17218 | 23354026 | 0.31 | 0.07 |
| 2017 | 66763 | 16899 | 17918 | 25147056 | 0.27 | 0.07 |
| 2018 | 67279 | 17387 | 18392 | 27141431 | 0.25 | 0.06 |
| 2019 | 62685 | 17196 | 18129 | 29012556 | 0.22 | 0.06 |
| 2020 | 49844 | 13868 | 14527 | 30450289 | 0.16 | 0.05 |
| 2021 | 55682 | 14747 | 15384 | 31910687 | 0.17 | 0.05 |
| 2022 | 64105 | 17080 | 17884 | 33505611 | 0.19 | 0.05 |